ஊடக வாசிப்பு

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல்விவகாரங்களிற்கான கீழ்நிலை செயலாளர்  தோமஸ்சனோன்- வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரவை சந்தித்த பின்னர்-டிசம்பர் 14 2015

இலங்கையில் முன்னேற்றமும் வாய்ப்பும் காணப்படுகின்ற இந்த தருணத்தில் எனது முதலாவது விஜயம் அமைவது எனக்கு மகிழ்ச்சியை தருகின்றது.இலங்கை முன்னோக்கி நகர்கின்றது, அதன் தலைவர்களும் மக்களும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த நாட்டை அமைதி,ஸ்திரதன்மை மற்றும் வளத்தை நோக்கிய நீண்டபாதையில் பயணிக்கசெய்வதற்காக இணைந்து பணியாற்றுகின்றனர்.

நான் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் சற்றுமுன்னர் மிகவும் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன்,நான் இந்த விருந்தோம்பலிற்காக உங்களிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், இது இலங்கை மக்கள் இரக்கம்மிகுந்தவர்கள் மற்றும் தாரளமனப்பான்மை கொண்டவர்கள் என்ற பெருமைய பிரதிபலிப்பதாக நான் கருதுகிறேன்,நாங்கள் அமெரிக்கா எப்படி இலங்கைக்கு ஆதரவாக செயற்பட முடியும் எனநாங்கள் ஆராய்ந்தோம்- இராஜாங்க செயலாளர் கெரி தெரிவித்திருந்தவிதத்தில்,எங்கள் கூட்டாண்மையை எவ்வாறு மேலும் பலப்படுத்துவது என ஆராய்ந்தோம்.

இலங்கை மக்களும் அமெரிக்க மக்களும் பல தலைமுறையாக நண்பர்களாக உள்ளனர்,நாங்கள் வர்த்தகம் மற்றும் வியாபாரத்தின் மூலம் மாத்திரம் நன்மையடையவில்லை,கலாச்சார பரிமாற்றங்கள் மற்றும் தனிப்பட்ட உறவுகள் மூலமாகவும் நாங்கள் பயனடைந்துள்ளோம்.இலங்கையை தங்கள் வீடாக்கிக்கொண்ட அமெரிக்கர்களோ அல்லது அமெரிக்காவை தங்கள் வீடாக்கிக்கொண்ட இலங்கையர்களோ,

பிராந்திய விழிப்புணர்வை  ஏற்படுத்துவதற்கான இலங்கையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அது ஜனநாயக ஆட்சிமுறை,மனித உரிமைகளிற்கு மதிப்பு கடற்போக்குவரத்து சுதந்திரம்,தொடர்ச்சியான அபிவிருத்தி,மற்றும் சூழல்பொறுப்புணர்வு ஆகிய விழுமியங்களை ஊக்குவிப்பதை அடிப்படையாககொண்டது,

சர்வதே அமைதிப்படை திட்டங்கள், இயற்கை பேரிடர் உதவிகள் போன்றவற்றிற்கு இலங்கையின் பங்களிப்பை நாங்கள் வரவேற்கின்றோம்,உங்கள் பாதுகாப்பு படையினரால் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க பங்களிப்பை வழங்கமுடியும்.
கடந்த மேமாதத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரவும்,இராஜாங்க செயலாளர் கெரியும் இரு நாடுகளும் பரிமாற்றம் குறித்த வரலாற்றை மேலும் வளர்தெடுப்பதற்கும், எங்களது ஒத்துழைப்பை மேலும் விஸ்தரிப்பதற்கும்,எங்கள் உறவுகளை மேலும் அதிகரிப்பதற்கும் இரு நாடுகளும், கூட்டாண்மை பேச்சுக்களை ஆரம்பிக்கும் என குறிப்பிட்டிருந்தனர்.
அமெரிக்க இலங்கை முதலாவது கூட்டாண்மை பேச்சுக்கள் 2016 பெப்ரவரியில் அமெரிக்காவின் வாசிங்டனில் இடம்பெறும் என்பதை வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்,
இந்த வருடாந்திர கூட்டம் எங்கள் உறவுகளின் சகல அம்சங்கள் குறித்து ஆராய்வதற்கான வாய்ப்பை வழங்கும்,அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துடனும் அதன் மக்களுடனும் எவ்வாறு நேரடியாக ஈடுபடுத்திக்கொள்ளலாம் என்பதை ஆராய்வதற்கான வாய்ப்பையும் வழங்கும்.
இந்த முயற்சிகள் பரந்துபட்டவையாகவும்,இரு தேசத்தின் மக்களிற்கும் நன்மையளிப்பதாகவும் காணப்படும்.மீளக்குடியேறியவர்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்ளும் சமூகங்களிற்கு எங்களது ஒத்துழைப்பு நன்மையை அளிக்கும்,நாங்கள் வீட்டு மட்டத்திலும்,சமூக மற்றும் தேசியமட்டத்திலும், நல்லிணக்கத்திற்கும் பரந்துபட்டமாற்றத்திற்கும் உதவுவோம்,நாங்கள் வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்போம்,- வருமானத்தை அதிகரிக்க, வேலைவாய்ப்பை அதிகரிக்க,இருநாடுகளிலும் வாழ்க்கை தரத்தை அதிகரிக்க.
நான் இங்கிருக்கும் காலப்பகுதியில்மிகவும் பயனுள்ளவையாக அமையும் என எதிர்பார்க்கும் சந்திப்புகள் குறித்து ஆவலுடன் உள்ளேன்.